### தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியில் இருந்து

# விளையாட்டு வீரர்களுக்கு ரூ.40.55 லட்சம்

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை**

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 29 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.31.95 லட்சத்துக்கான காசோலைகள், ஒரு சைக்கிள் பந்தய வீரருக்கு ரூ.8.60 லட்சம் மதிப்பிலான அதிநவீன பந்தய சைக்கிள் என மொத்தம் ரூ.40 லட்சத்து 55 ஆயிரத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

இதுகுறித்து அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சீனாவில் டிசம்பர் 1 முதல் 7-ம் தேதி வரை நடைபெறவுள்ள 4-வது உலக ஜூனியர் சாப்ட் டென்னிஸ் போட்டியில் (சிறுவர் மற்றும் சிறுமியர்) கலந்துகொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ள 24 வீரர், வீராங்கனைகளுக்கு போட்டிக்கான செலவினமாக, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து தலா ரூ.1 லட்சம் வீதம் ரூ.24 லட்சத்துக்கான காசோலைகளை துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்.

மேலும், தாய்லாந்து நாட்டில் டிச.1 முதல் 7-ம் தேதி வரை நடைபெறவுள்ள உலக திறன் விளையாட்டு இளைஞர் போட்டியில் கலந்துகொள்ள உள்ள 5 நரம்பியல் சார் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு விமான கட்டணம், தங்குமிடம் மற்றும் போட்டிக்கான நுழைவு கட்டணம் என மொத்த செலவுத்தொகை ரூ.7,95,000-த்துக்கான காசோலை வழங்கினார்.

தூத்துக்குடியைச் சேர்ந்த சைக்கிளிங் விளையாட்டு வீரர் சூர்ய பிரகாஷ், தேசிய - சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வகையில் அவருக்கு அறக்கட்டளை நிதியிலிருந்து பந்தய சைக்கிள் வழங்க தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி பரிந்துரை செய்திருந்தார்.

அதன்படி, சைக்கிளிங் விளையாட்டு வீரருக்கு ரூ.8 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பிலான அதிநவீன பந்தய சைக்கிளை துணை முதல்வர் வழங்கினார்.

ஆக மொத்தம், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியில் இருந்து 30 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு போட்டிகளுக்காக, ரூ.40 லட்சத்து 55 ஆயிரத்துக்கான உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் அமைச்சர் செந்தில் பாலாஜி ஆஜர்

**சென்னை**

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச்சட்ட வழக்கில் அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறை அதிகாரிகள் கடந்தாண்டு கைது செய்தனர். பின்னர் அவர் உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி ஜாமீனில் வந்தார்.

இந்நிலையில் அமலாக்கத்துறை வழக்கு சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். கார்த்திகேயன் முன்பாக நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது அமைச்சர் செந்தில் பாலாஜி நேரில் ஆஜரானார். செந்தில் பாலாஜி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ம.கௌதமன், தடயவியல் துறை கணினிப்பிரிவு உதவி இயக்குநர் மணிவண்ணனிடம் குறுக்கு விசாரணை நடத்தினார். இந்த குறுக்கு விசாரணை நிறைவடையாததால் விசாரணையை நீதிபதி வரும் நவ.7-க்கு தள்ளிவைத்துள்ளார்.




'தி இந்து' ஆபீஸ் அண்டு நேஷனல் பிரஸ் எம்ப்ளாயீஸ் யூனியனின் 68-ம் ஆண்டு விழா சென்னையில் நேற்று நடைபெற்றது. இதில், சங்கத்தின் பொதுச்செயலாளர் எம்.கமலநாதனுக்கு பொன்னாடை அணிவித்து கவுரவப்படுத்தினார் சங்கத் தலைவர் கனிமொழி எம்.பி. இந்த விழாவில், 'தி இந்து' குழுமத் தலைவர் நிர்மலா லஷ்மண், இயக்குநர்கள் என்.முரளி, என்.ரவி, என்.ராம், ரோஹித் ரமேஷ், 'தி இந்து' தலைமை செயல் அலுவலர் எல்.வி.நவநீத், பணியாளர் பிரிவு துணைத் தலைவர் ஆர்.சுப்பிரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். படம்: ம.பிரபு

### தீபாவளிக்கு சொந்த ஊர் செல்ல மக்கள் ஆர்வம்

# விமான டிக்கெட் கட்டணம் பல மடங்கு உயர்வு

### இன்று மேலும் அதிகரிக்கலாம் என கணிப்பு

**சென்னை**

தீபாவளிக்கு சொந்த ஊர்களுக்கு மக்கள் அதிகளவில் செல்வதால் விமான டிக்கெட் கட்டணம் பல மடங்கு அதிகரித்துள்ளன. குறிப்பாக இன்று கட்டணம் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

தீபாவளிப்பண்டிகையை கொண்டாட சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் ஏராளமானோர் சொந்த ஊர்களுக்கு செல்கின்றனர். ரயில், பேருந்துகளில் டிக்கெட் கிடைக்காத பலர், விமானங்களில் செல்வதற்காக சென்னை விமான நிலையத்துக்கு படையெடுத்து வருகின்றனர்.

**அலைமோதும் பயணிகள்**

இதனால் உள்நாட்டு விமான நிலையத்தில் பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது. தூத்துக்குடி, மதுரை, திருச்சி, கோவை, சேலம் ஆகிய நகரங்களுக்குச் செல்லும் விமான கட்டணங்கள் பல மடங்கு அதிகரித்துள்ளன. அதேபோல், திருவனந்தபுரம், கொச்சி, ஹைதராபாத், டெல்லி, கொல்கத்தா, அந்தமான் ஆகிய இடங்களுக்கு செல்லும் விமான கட்டணங்களும் அதிகரித்துள்ளன.

சென்னை- தூத்துக்குடி சாதாரண நாட்கள் கட்டணம் ரூ.4,109, இது நேற்று ரூ.8,976 முதல் ரூ.13,317 வரை உயர்ந்தது. சென்னை- மதுரை இடையே சாதாரண நாட்கள் ரூ.4,300 ஆகும். இந்த கட்டணம் நேற்று ரூ.11,749 முதல் ரூ. 17,745 வரை இருந்தது. சென்னை - திருச்சிக்கு சாதாரண நாட்கள் ரூ.2,382 ஆகும். நேற்று ரூ.8,211 முதல் ரூ.10,556 வரை இருந்தது.

சென்னை - கோவை சாதாரண நாட்கள் ரூ.3,474 ஆக இருக்கும். இந்தக் கட்டணம் நேற்று ரூ.7,872 முதல் ரூ.13,428 வரை உயர்ந்தது. சென்னை - சேலம் சாதாரண நாட்களில் ரூ.3,300 இருக்கும் நிலையில், நேற்று ரூ.8,353 முதல் ரூ.10,867 வரை அதிகரித்தது.

இதேபோல் சென்னை - டெல்லி சாதாரண நாட்கள் கட்டணம் ரூ.5,475. நேற்று ரூ.5,802 முதல் ரூ.6,877 வரை இருந்தது. சென்னை- கொல்கத்தா சாதாரண நாட்கள் ரூ.4,599. நேற்று ரூ.11,296 முதல் ரூ.13,150 வரை. சென்னை - ஹைதராபாத் சாதாரண நாட்கள் ரூ.2,813. நேற்று ரூ.3,535 முதல் ரூ.7,974 வரை. சென்னை - அந்தமான் சாதாரண நாட்கள் ரூ.5,479. நேற்று ரூ.9,897 முதல் ரூ.10,753 வரை.

சென்னை - திருவனந்தபுரம் சாதாரண நாட்கள் ரூ.3,477. நேற்று ரூ.6,185 முதல் ரூ.18,501 வரை. சென்னை -கொச்சி சாதாரண நாட்கள் ரூ.2,592. நேற்று ரூ.4,625 முதல் ரூ.6,510 வரை.

நாளை தீபாவளி பண்டிகை என்பதால், இன்று விமான கட்டணங்கள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

## போக்குவரத்து ஓய்வூதியர் பலன்களை உடனே வழங்க பாமக வலியுறுத்தல்

**சென்னை**

பாமக தலைவர் அன்புமணி தனது எக்ஸ் வலைதளப்பதிவில் கூறியிருப்பதாவது:

அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் 10 ஆயிரம் ஓய்வூதியர்களில் 1,279 பேருக்கு மட்டும், ஓய்வூதியபலனாக ரூ.372 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது. ஓய்வு பெற்ற தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க இது எந்த வகையிலும் போதுமானதல்ல.

எனவே, ஓய்வுபெற்ற போக்குவரத்து தொழிலாளர்கள் அனைவரும் தீபாவளியை மகிழ்ச்சியாக கொண்டாடும் வகையில், அவர்களுக்கான ஓய்வுகால பலன்களை உடனடியாக வழங்கவேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### மாநில மனித உரிமை ஆணைய தலைவர் இல்லத்துக்கான

# போலீஸ் பாதுகாப்பு திரும்ப பெற்றதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் முறையீடு

**சென்னை**

மாநில மனித உரிமை ஆணையத் தலைவரான நீதிபதி எஸ்.மணிக்குமார் இல்லத்துக்கு வழங்கப்பட்டு வந்த போலீஸ் பாதுகாப்பை திரும்பப் பெற்றதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

கேரள உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதியான எஸ். மணிக்குமார் தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையத் தலைவராக பதவி வகித்து வருகிறார். இந்நிலையில் அவரது இல்லத்துக்கு வழங்கப்பட்டு வந்த போலீஸ் பாதுகாப்பு திரும்பப் பெறப்பட்டுள்ளதாகக் கூறி பாமக வழக்கறிஞர் கே.பாலு உயர் நீதிமன்ற நீதிபதிகள் டி.கிருஷ்ணகுமார், பி.பி. பாலாஜி ஆகியோர் அடங்கிய அமர்வில் முறையீடு செய்தார்.

**முன்னறிவிப்பு இன்றி...**

அப்போது வழக்கறிஞர் கே.பாலு, "கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 3 முறை அவரது இல்லத்துக்கு வழங்கப்பட்டு வந்த போலீஸ் பாதுகாப்பு திரும்பப் பெறப்பட்டுள்ளது. கேரள உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக பதவி வகித்த அவர் தற்போது தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையத்தின் தலைவராக பதவி வகித்து வரும் சூழலில் அவரது இல்லத்துக்கான போலீஸ் பாதுகாப்பை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி விலக்கிக் கொள்வது ஏற்புடையதல்ல. இதுதொடர்பாக உயர் நீதிமன்றமே தாமாக முன்வந்து வழக்காக விசாரிக்க வேண்டும்" எனக் கோரினார்.

அதையடுத்து நீதிபதிகள், இதுதொடர்பாக உயர் நீதிமன்றத்தில் உள்ள சம்பந்தப்பட்ட குழுவிடம் மனு அளிக்க அறிவுறுத்தியுள்ளனர்.

### சென்னை, காமராஜர் துறைமுகங்களின்

# பணியாளர்கள் பங்கேற்ற ஒற்றுமை தின ஓட்டம்

**சென்னை**

இந்தியாவின் இரும்பு மனிதர் என அழைக்கப்படும் சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்த நாளான அக்.31-ம் தேதியை மத்திய அரசு தேசிய ஒற்றுமை தினமாகக் கொண்டாடி வருகிறது. இதன்படி, சென்னை மற்றும் காமராஜர் துறைமுகங்கள் சார்பில், தேசிய ஒற்றுமை தினம் நேற்று கொண்டாடப்பட்டது.




தேசிய ஒற்றுமை தினத்தை முன்னிட்டு, சென்னை மற்றும் காமராஜர் துறைமுகங்கள் சார்பில் ஒற்றுமைக்கான ஓட்டம் நடைபெற்றது. இதை துறைமுகங்களின் தலைவர் சுனில் பாலிவால், டேபிள் டென்னிஸ் விளையாட்டு வீரர் சரத் கமல் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

இதை முன்னிட்டு, ஒற்றுமைக்கான உறுதிமொழி ஏற்கப்பட்டது. பின்னர், ஒற்றுமை ஓட்டம் நடைபெற்றது. பிரபல டேபிள் டென்னிஸ் விளையாட்டு வீரர் சரத் கமல் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, ஒற்றுமை ஓட்டத்தை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். பின்னர், அவர் பேசும்போது, விளையாட்டு எவ்வாறு மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கிறது என்பதை எடுத்துரைத்தார். மேலும், இந்த ஓட்டத்தில் பங்கேற்பவர்கள் தங்களுடைய தினசரி வாழ்வில் ஒற்றுமை உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

சென்னை மற்றும் காமராஜர் துறைமுகங்களின் தலைவர் சுனில் பாலிவால் பேசும்போது, "நாட்டின் வளர்ச்சிக்கு ஒற்றுமையும், ஒருமைப்பாடும் மிகவும் முக்கியம். எனவே, அவற்றில் கவனம் செலுத்த வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை என்பது தான் நமது நாட்டின் வலிமை. எனவே, அதைக் கொண்டாட வேண்டும்" என்றார்.

இ ந் நி க ழ் ச் சி யி ல் , காமராஜர் துறைமுகத்தின் மேலாண் இயக்குநர் ஐரீன் சிந்தியா, சென்னை துறைமுகத்தின் துணைத் தலைவர் எஸ்.விஸ்வநாதன், அதிகாரிகள், ஊழியர்கள் பங்கேற்றனர்.

## ஆஸ்திரேலியாவில் நடைபெறும் காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் அப்பாவு பங்கேற்பு

**சென்னை**

ஆஸ்திரேலியா நாட்டின் சிட்னியில் 67-வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாடு நவம்பர் 5-ம் தேதி முதல் 8-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் தமிழக கிளையின் பிரதிநிதியாக சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு கலந்து கொள்கிறார்.

பேரவையின் கூடுதல் செயலாளர் பா. சுப்பிரமணியம், இம்மாநாட்டின் போது நடைபெறும் SOCATT கூட்டங்களில் கலந்து கொள்கிறார். இருவரும் நவ.2-ம் தேதி இரவு 11.25 மணிக்கு விமானம் மூலம் சிங்கப்பூர் சென்று, அங்கிருந்து மலேசியா வழியாக சிட்னிக்கு 5-ம் தேதி சென்றடைகின்றனர். மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு நியூசிலாந்து நாட்டுக்கு செல்லும் அவர்கள், நவம்பர் 17-ம் தேதி இரவு 10.10 மணிக்கு சென்னை வருகின்றனர்.

### தீபாவளி பண்டிகைக்காக

# இன்று இரவு 12 மணிவரை மெட்ரோ ரயில் சேவை

**சென்னை**

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தீபாவளி பண்டிகை தொடர் விடுமுறையை பயணிகளின் வசதிக்காக, இன்று (அக்.30) மெட்ரோ ரயில் சேவை நீட்டிக்கப்படுகிறது. அதாவது, புதன்கிழமை காலை 5 முதல் இரவு 12 மணிவரை மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

சென்ட்ரல் - பரங்கிமலை வரையிலான பச்சைவழித்தடம் மற்றும் விம்கோநகர்-விமான நிலையம் மெட்ரோ வரை நீல வழித்தடம் ஆகியவற்றில் புதன்கிழமை காலை 8 மணி முதல் முற்பகல் 11 மணி வரை யும், மாலை 5 மணிமுதல் இரவு 8 மணிவரையும் 6 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும். அதே நேரத்தில், விமான நிலையம் - விம்கோ நகர் வரை யிலான நீல வழித்தடத்தில், வண்ணாரப்பேட்டை மெட்ரோ முதல் ஆலந்தூர் மெட்ரோ இடையே 3 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

அக்.31, நவ.1 (வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை) ஆகிய நாட்களில் மெட்ரோ ரயில்கள் விடு முறை நாள் அட்டவணையின்படி இயங்கும். காலை 5 மணிமுதல் இரவு 11 மணிவரை மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மோதிரத்தை அடகு வைத்து மது அருந்திய

# தந்தையை கொலை செய்த மகன் கைது

**சென்னை**

தங்க மோதிரத்தை அடமானம் வைத்து, அந்த பணத்தில் மது அருந்திய தந்தையை அடித்துகொலை செய்த மகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது:

சென்னை மேற்கு மாம்பலம் விநாயகம் தெருவை சேர்ந்தவர் வெங்கடேஷ் (45). கார் ஓட்டுநராக பணி செய்து வந்தார். இவருக்கு மனைவியும், மகன் மற்றும் மகள் உள்ளனர். மகள் நர்சிங் படித்து வருகிறார். மகன் சுனில்குமார் (19) உணவு விநியோக ஊழியராக தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வருகிறார். வெங்கடேஷ் மதுபோதைக்கு அடிமையானவர் என கூறப்படுகிறது.

இதனால் சரிவர வேலைக்கு செல்லாமல் தினமும் குடித்துவிட்டு வந்து தொல்லை கொடுத்து வந்ததாக தெரிகிறது. நேற்று முன்தினம் வீட்டில் இருந்த தங்க மோதிரத்தை அடமானம் வைத்து, மது அருந்தி வீட்டுக்கு வந்தாராம். இதை மகன் சுனில்குமார் தட்டிக்கேட்டுள்ளார். மோதிரத்தை எங்கே அடமானம் வைத்துள்ளீர்கள்? என்று கேட்டுள்ளார். இதையடுத்து அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு தகராறாக மாறி உள்ளது.

ஆத்திரம் அடைந்த சுனில் குமார், அருகில் கிடந்த பிளாஸ்டிக் பைப்பால் தந்தையின் தலையில் பலமாக தாக்கியுள்ளார். இதில், சுருண்டு விழுந்த வெங்கடேஷ் அங்கேயே இறந்து விட்டார். இதை சற்றும் எதிர்பாராத குடும்பத்தினர், கொலை வழக்கில் சுனில் குமார் கைதாவதைத் தடுக்கும் வகையில் மது போதையில் வெங்கடேஷ் தவறி விழுந்து இறந்துவிட்டதாக அசோக் நகர் போலீஸுக்கு அவர்களே புகார் கொடுத்துள்ளனர்.

இதுகுறித்து அசோக்நகர் போலீஸார் விசாரித்தனர். முதல் கட்டமாக வெங்கடேஷ் உடல் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. இதில், அவர் கொலை செய்யப்பட்டது உறுதிசெய்யப்பட்டது. அதன் பிறகே வெங்கடேஷ் கீழே விழுந்து இறந்துவிட்டதாக நாடகமாடியது அம்பலமானது. இதைத்தொடர்ந்து கொலை வழக்கு பதிவு செய்த அசோக் நகர் போலீஸார் சுனில் குமாரை கைது செய்தனர்.

மந்தவெளிப்பாக்கம் கிளை
எண்.226, ஆர்.கே.மடம் சாலை,
எண்.171, மந்தவெளிப்பாக்கம், சென்னை.
போன் :044 24939035/9444080937
மின்னஞ்சல் : cb0937@canarabank.com

केनरा बैंक Canara Bank

**கோரிக்கை அறிவிப்பு**

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (சட்டம்), பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு**

பெறுநர்,

1. M/s. ஆர் ஜி ஹோம் நீட்ஸ்
எண்.22/32, லட்சுமி கோயில் தெரு, சென்னை 600 011.
2. திரு. ரகுபதி, S/O. பாண்டி (உரிமையாளர்)
3. திருமதி. மகாலட்சுமி, W/O. ரகுபதி (உடன் கடன்தாரர்)

இருவரது வசிப்பிடம்
பழைய எண்.32, புதிய எண்.22, லட்சுமி அம்மன் கோயில், பெரம்பூர், சென்னை 11
மேலும் கதவு எண்.3, மீரான் சாஹிப் தெரு, நரசிங்கபுரம், மவுண்ட் ரோடு, சென்னை 2.

**பொருள் : கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் (இனி "சட்டம்" என குறிப்பிடப்படும்) கீழ், **கனரா வங்கி, மந்தவெளிப்பாக்கம் கிளையின் கீழ்கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,** இனி "ஈடுபெற்ற கடன் வழங்கியவர்" என்று குறிப்பிடப்படுபவர், இந்த அறிவிப்பின் மூலம் உங்களுக்கு கீழ்கண்டவாறு தெரிவிப்பதாவது:

M/s. **ஆர் ஜி ஹோம் நீட்ஸ் மற்றும் அதன் உரிமையாளர் திரு. ரகுபதி,** இனிமேல் "கடன்தாரர்" என்று குறிப்பிடப்படும் மற்றும் **திருமதி. மகாலட்சுமி,** இனிமேல் "உடன் கடன்தாரர்" என்று குறிப்பிடப்படும் ஆகியோர் இங்கே அட்டவணை Aல் குறிப்பிடப்பட்டுள்ள கடன் வசதி / வசதிகளைப் பெற்று, ஈடுபெற்ற கடன் வழங்கியவருக்கு ஆதரவாக பாதுகாப்பு ஒப்பந்தம்/களில் கையெழுத்திட்டுள்ளார். மேற்கூறிய நிதி உதவியைப் பெறும்போது, மேலே குறிப்பிட்ட ஒப்பந்தங்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் தொகை (களை) திருப்பிச் செலுத்த நீங்கள் வெளிப்படையாக உறுதியளித்துள்ளீர்கள். இங்கே அட்டவணை Bல் விவரிக்கப்பட்டுள்ள ஈடுபெற்ற சொத்துக்களுக்கு எதிரான ஒப்பந்தங்களிலும் நீங்கள் நுழைந்துள்ளீர்கள்.

**அட்டவணை A: கடன்தாரர் பெற்ற கடன் வசதிகள் பற்றிய விவரங்கள்**

| வ. எண். | கடன் கணக்கு எண் | கடன் வகை/வரம்பு | அனுமதிக்கப்பட்ட தேதி | அனுமதிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | 0937285000008 | ஓசிசி - கனரா வியாபர் | 21/01/2020 | ரூ.3,37,00,000/- |
| 2 | 0937755000039 | GECL | 23/06/2020 | ரூ.11,69,000/- |
| 3 | 170002592211 | GECL EXT | 03/12/2021 | ரூ.90,50,000/- |

மேலே கூறப்பட்ட கடன்/கிரெடிட் வசதிகள், இங்குள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை அடமானம் வைப்பதன் மூலம், எங்களுக்குச் சாதகமாக உங்களால் செயல்படுத்தப்பட்ட தொடர்புடைய ஆவணங்களின் மூலம் முறையாகப் பாதுகாக்கப்படுகிறது.நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி உங்கள் பொறுப்புகளை நீங்கள் செலுத்தத் தவறியதால், வங்கி **02.04.2024** அன்று உங்கள் கடன்களை NPA ஆக வகைப்படுத்தியுள்ளது. எனவே, சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ், ஈடுபெற்ற கடன் வழங்கியவர் தங்களின் முழுப் பொறுப்பையும் விடுவிக்க இந்த அறிவிப்பின் மூலம் அழைப்பு விடுக்கிறார். அதன்படி, **02.04.2024** அன்று வரையிலான, **ரூ.4,63,68,666.74** (ரூபாய் நான்கு கோடியே அறுபத்து மூன்று லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு மற்றும் எழுபத்து நான்கு பைச மட்டும்) மற்றும் பிற செலவுகளுடன் சேர்த்து இந்த அறிவிப்பு அனுப்பப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு உங்களை கேட்டுக்கொள்கிறார், தவறும்பட்சத்தில் சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் உள்ள அனைத்து அல்லது ஏதேனும் உரிமைகளையும் நாங்கள் பயன்படுத்துவோம்.

பிரிவு 13(13)ன் படி, கடன்தாரர்/உத்தரவாததாரர் விற்பனை, குத்தகை அல்லது வேறு வழிகளில், இங்குள்ள அட்டவணை Bல் விவரிக்கப்பட்டுள்ள ஈடுபெற்ற சொத்துக்களை, ஈடுபெற்ற கடன் வழங்கியவரின் எழுத்துப்பூர்வ ஒப்புதலைப் பெறாமல், பரிமாற்றம் செய்யக்கூடாது என்பதையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். பொருள் சட்டம் மற்றும்/அல்லது நடைமுறையில் உள்ள வேறு எந்தச் சட்டத்தின் கீழ் எங்களுக்குக் கிடைக்கும் வேறு எந்த உரிமைகளுக்கும் பாரபட்சமின்றி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

ஈடுபெற்ற சொத்தை மீட்டெடுக்க, கிடைக்கும் நேரத்தைப் பொறுத்த வரையில், சட்டத்தின் பிரிவு 13ன் துணைப் பிரிவு (8)ன் விதிகளுக்கு உங்கள் கால அவகாசம் வழங்கப்படுகிறது.

**இந்த கோரிக்கை அறிவிப்பு உங்களுக்கு பதிவு அஞ்சல் / கூரியர் மூலம் அனுப்பப்பட்டது.**

**அட்டவணை B (அடமானம் வைக்கப்பட்ட அசையாச் சொத்து)**

1716.75 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் சிறு துண்டுகளும் (பட்டாப்படி விஸ்தீரணம் 1740 சதுர அடி), **புதிய கதவு எண். 3, மீரான் சாஹிப் தெரு, நரசிங்கபுரம், மவுண்ட் ரோடு, சென்னை 2,** ஆர்.எஸ்.எண்.3258 (பகுதி), பிளாக் எண்.64, ஓ.எஸ்.எண்.89, பட்டா சி.ஏ.எண்.849/1995-96, தேதியிட்டது 16.08.1995 மற்றும் எல்லைகள் : வடக்கில் ஆர்.எஸ். எண்.3257, தெற்கில் ஆர்.எஸ்.எண்.3259, கிழக்கில் ஆர்.எஸ்.எண்.3249/1 மற்றும் 3249/2 மற்றும் மேற்கில் ஆர்.எஸ். எண்.3323ல் உள்ள சொத்து (மீரா சாஹிப் தெரு), திருவல்லிக்கேணி சார் பதிவு மாவட்டம் மற்றும் மத்திய சென்னை பதிவு மாவட்டத்தில் உள்ளது.

**அட்டவணை சி (தேதியில் நேரடி பொறுப்பு விவரங்கள்)**

| வ. எண். | கடன் கணக்கு எண் | கடன் வகை/வரம்பு | 28.10.2024 தேதியின்படி வட்டி யுடன் கூடிய பொறுப்பு |
|---|---|---|---|
| 1 | 0937285000008 | ஓசிசி - கனரா வியாபர் | ரூ.3,37,00,000/- |
| 2 | 0937755000039 | GECL | ரூ.11,69,000/- |
| 3 | 170002592211 | GECL EXT | ரூ.90,50,000/- |

நாள் : 29-10-2024 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கனரா வங்கி.

FIVE STAR Business Finance Limited

**பைவ்-ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட்**
CIN: U65991TN1984PLC010844

**பதிவு அலுவலகம்:** புதிய எண். 27, பழைய எண்.4, டெய்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை– 600 010
Ph: 044- 4610 6200, E-Mail: info@fivestargroup.in, Website: www.fivestargroup.in
**கிளை அலுவலகம்: எண்.91, 1வது தளம், P.H.ரோடு, சிட்டி யூனியன் வங்கி மேல்புறம், நெற்குன்றம், சென்னை - 600107**
**Mob : 90805 41731, 74018 37192**

**ஏல அறிவிப்பு மூலம் பொது ஏலம்**
APPENDIX- IV-A [See provision to rule 8 (6)]
**அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு**

இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் / சக-கடன்தாரர்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட்டில் அடமானம் வைத்துள்ளனர். SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் கீழுள்ள விதிகளின் படி, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் அதன் அசையா சொத்துக்களை (ஈடுபெற்ற ஆஸ்தி / சொத்து) சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளனர். பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட் -க்கு செலுத்த வேண்டிய கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன் பாக்கிகள், பொருந்தக்கூடிய வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்கள் போன்றவற்றை பெறுவதற்காக பொது ஏலம் மூலமாக ஈடுபெற்ற சொத்து விற்பனை செய்யப்படும். ஈடுபெற்ற ஆஸ்தி **15 நவம்பர் 2024 அன்று விற்பனை செய்யப்படும்** மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் (இனி விதிகள் என்று குறிப்பிடப்படும்) விதி 8(6)& 9(1) ன் கீழும் கீழ்க்குறிப்பிட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டும் ஈடுபெற்ற ஆஸ்திகள் "உள்ள இடத்தல் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு", "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" மற்றும் "பின்னர் கம்பெனியை எதற்கும் நாடமுடியாது" என்ற அடிப்படையில் விற்கப்படும்.

| கடன்தாரர்கள் பெயர் & கடன் கணக்கு எண். | நிலுவைத்தொகை & கோரிக்கை அறிவிப்பு தேதி | சொத்து விவரம் | குறைந்தபட்ச விலை (INR) / EMD /ஏல உயர்வுத்தொகை |
|---|---|---|---|
| **K.பழனி,** S/o.குப்பன், எண்.145, தேவி நகர், 5வது குறுக்கு தெரு, கொலாடி மெயின் ரோடு, திருவேற்காடு, சென்னை - 600077, **மேலும் முகவரி,** எண்.23/A, பாரதி நகர், அன்பு இல்லம், கொலாடி மெயின் ரோடு, திருவேற்காடு, சென்னை - 600077 **கடன் கணக்கு எண்கள்:** LA31540 / LA31541/ LA31542 | கடன் எண்.: **LA31540** **19.03.2024** அன்றுள்ளபடி ₹ **4,11,57,173/-** (ரூபாய் நான்கு கோடியே பதினொன்று லட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து நூற்று எழுபத்து மூன்று மட்டும்). கடன் எண்.: **LA31541** **19.03.2024** அன்றுள்ளபடி ₹ **4,18,38,222/-** (ரூபாய் நான்கு கோடியே பதினெட்டு லட்சத்து முப்பத்து எட்டாயிரத்து இருநூற்று இருபத்து இரண்டு மட்டும்) கடன் எண்.: **LA31542** **19.03.2024** அன்றுள்ளபடி ₹ **4,25,11,675/-** (நான்கு கோடியே இருபத்து ஐந்து லட்சத்து பதினொன்றாயிரத்து அறுநூற்று எழுபத்து ஐந்து மட்டும்) **கோரிக்கை அறிவிப்பு தேதி : 20.03.2024** | **ஐட்டம்-I:** சர்வே எண்கள்.136/1, 133, 135, 139, 126, 138 & 127, **மனை எண்.112, எண்.91, கொலாடி கிராமம், தேவி நகர், அம்பத்தூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம்** என்னும் முகவரியில் **4800 சதுர அடி காலி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மனை எண்.117, தெற்கு: 5வது குறுக்கு தெரு, கிழக்கு: மனை எண்.111, மேற்கு: மனை எண்.113 & 114. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 50 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 50 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 96 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 96 அடி ஆக மொத்தம் **4800 சதுர அடி.** மேற்குறிப்பிட்டுள்ள சொத்தானது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் சைதாப்பேட்டை ஜாயிண்ட்-II சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்டது. **ஐட்டம்-III: சர்வே எண்கள்.126, 127, 133, 135, 136/1, 136/2, 137, 138 & 139, பட்டா எண்.260 படி சர்வே எண் 127/6 மற்றும் 133/4, மனை எண்.D (கிழக்கு பக்கம்), ஸ்ரீ தேவி கருமாரியம்மன் நகர், 5வது குறுக்கு தெரு, கொலாடி ரோடு, திருவள்ளூர் மாவட்டம், சென்னை-600077 என்னும் முகவரியில் 1210 சதுர அடி காலி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: 5வது குறுக்கு தெரு, தெற்கு: மனை எண்.J, கிழக்கு: மனை எண்.E, மேற்கு: மனை எண்.D-ன் மீதமுள்ள பகுதி. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 22 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 22 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 55 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 55 அடி ஆக மொத்தம் 1210 சதுர அடி. மேற்குறிப்பிட்டுள்ள சொத்தானது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் சைதாப்பேட்டை ஜாயிண்ட்-II சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்டது. | **ஐட்டம் எண்.I: குறைந்தபட்ச விலை :** ₹ **2,60,00,000/-** (ரூபாய் இரண்டு கோடியே அறுபது லட்சம் மட்டும்) **EMD:** ₹ **26,00,000/-** (ரூபாய் இருபத்து ஆறு லட்சம் மட்டும்) **ஏல உயர்வுத்தொகை:** ₹ **10,000/-** (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) **ஐட்டம் எண்.III: குறைந்தபட்ச விலை :** ₹ **65,00,000/-** (ரூபாய் அறுபத்து ஐந்து லட்சம் மட்டும்) **EMD:** ₹ **6,50,000/-** (ரூபாய் ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) **ஏல உயர்வுத்தொகை:** ₹ **10,000/-** (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) |

**ஏலத்தேதி மற்றும் நேரம் : 15.11.2024 அன்று காலை 11.00 மணியிலிருந்து மதியம் 1.00 மணி வரை**

சொத்துக்களை பார்வையிடும் நேரம் & தேதி: **04.11.2024 to 13.11.2024** அன்று மதியம் 2 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

**பொது ஏலத்திற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் கீழே அளிக்கப்பட்டுள்ளன:**

- "உள்ள இடத்தல் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு", "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" மற்றும் "பின்னர் கம்பெனியை எதற்கும் நாடமுடியாது" அடிப்படையிலும் மற்றும் பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட்டினால் அறியப்பட்ட அல்லது அறியப்படாத தற்போதைய மற்றும் எதிர்கால வில்லங்கங்கள் அடிப்படையிலும் பொது ஏலம் மூலம் விற்பனை நடைபெறும். ஏல படிவம், அறிவிப்பு, பொது ஏலத்திற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை அலுவலகம், பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட், எண்.91, 1வது தளம், P.H.ரோடு, சிட்டி யூனியன் வங்கி மேல்புறம், நெற்குன்றம், சென்னை - 600107-ல் பெறுக்கொள்ளலாம்.
- குறைந்தபட்ச விலைக்கு குறைவாக ஈடுபெற்ற சொத்து விற்பனை செய்யப்படமாட்டாது.
- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு தெரிந்தவரையில் சொத்துக்களின் மீது எந்தவித வில்லங்கமும் கிடையாது. எனினும், எந்தவொரு உரிமை கோரல்கள், கட்டணங்கள், நிலுவைத்தொகைகள், வில்லங்கங்கள் தொடர்பாக தங்கள் சொந்த சுயாதீன விசாரணைகளை விருப்பமுள்ள ஏலதாரர்கள் மேற்கொள்ள வேண்டும் மற்றும் தங்கள் ஏலத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர் சொத்தின் உரிமை, அளவு / அளவீட்டு பற்றி திருப்தி அடைய வேண்டும். சொத்தில் ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால், ஏலம் சமர்ப்பித்த தேதியிலிருந்து எதிர்காலத்தில் பெறப்படும் அனைத்து பொறுப்புகளுக்கும் பங்கு பெறும் ஏலதாரர் மட்டுமே பொறுப்பாவார்.
- விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள சொத்து தொடர்பாக எந்தவொரு கோரிக்கை, சொத்தின் மீது கட்டணங்கள் / வில்லங்கங்கள் அல்லது இதர விஷயங்கள் எதுவும் ஏலத்தை சமர்ப்பித்தபின் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- விற்பனையின் கீழ் உள்ள சொத்து தொடர்பாக எந்தவொரு கட்டணம், உரிமை, வில்லங்கம், அரசாங்கம், உள்ளாட்சி அமைப்புகள் அல்லது வேறு எவருக்கேனும் சொத்து வரி பாக்கி, மின்சார கட்டணம் பாக்கி இருந்தால் அதற்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் பொறுப்பேற்க மாட்டார்.
- பொது ஏல அறிவிப்பு / விளம்பரம் போன்றவை பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட்-ன் எந்தவொரு சலுகை, அர்பணிப்பு அல்லது எந்தவொரு பிரதிநிதித்துவத்தையும் கொண்டதாக கருதப்படாது. மூன்றாவது நபர் உரிமை கோரல்கள் / உரிமைகள் / பாக்கிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் பொறுப்பேற்க மாட்டார்.
- SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் கீழுள்ள விதிகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி விற்பனை இருக்கும்.
- **விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்கள் ஏலங்களை EMDயுடன் சமர்ப்பிக்க வேண்டும். இது 14.11.2024 அன்றோ அதற்கு முன்னரோ மாலை 5.00 மணிக்குள் "Five Star Business Finance Limited" நிறுவனத்தின் பெயரில் டிடி மூலம் மட்டுமே செலுத்த வேண்டும்.**
- ஏலங்கள் மற்றும் இதர ஆவணங்களை ஒரு சீலிட்ட உறையில் வைத்து அதில் **"Offer for Purchase–Palani's Item I Property / "Offer for Purchase - Palani's Item III Property"** என்று குறிப்பிட்டு ஏலங்களை சமர்ப்பிப்பதற்கு கடைசி நாள் அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை வந்தடையும்படி அனுப்ப வேண்டும்.
- i) இஎம்டி செலுத்தியதற்கான அத்தாட்சி ii) பான் கார்ட் நகல் iii) அடையாள அட்டை அத்தாட்சி / முகவரி அத்தாட்சி / ஆதார் அட்டை / கேஒய்சி (சுயசான்றளிக்கப்பட்ட நகல்கள்) ஆகியவற்றை ஏலம் சமர்ப்பிப்பதற்கு முன் ஏலதாரர் அளிக்க வேண்டும். இல்லையெனில் ஏலம் நிராகரிக்கப்படும்.
- பொது ஏல நடைமுறைகளில் ஏலதாரர் மட்டுமே பங்கேற்க வேண்டும். இதர நபர் அனுமதிக்கப்பட மாட்டார்.
- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் வெற்றி பெற்ற ஏலதாரர் அறிவிக்கப்பட்டு ஆபர் ஏற்றுக்கொண்ட பின்னர் உடனடியாக வாங்கும் தொகையில் 25%-ஐ வெற்றி பெற்ற ஏலதாரர் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் EMD பறிமுதல் செய்யப்படும். பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட்-லிருந்து அதனை எலதாரர் கோர முடியாது.
- வாங்கும் தொகையில் மீதமுள்ள 75%ஐ வெற்றி பெற்ற ஏலதாரர் 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் எந்தவித அறிவிப்பும் இன்றி ஏலதாரால் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை பறிமுதல் செய்யப்படும். திரும்ப கோருவதற்கான எந்தவித கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலும் அந்த சொத்து மறுமுறை ஏலம் விடப்படும் மற்றும் செலுத்த தவறிய ஏலதாரர் அந்த சொத்து / தொகையில் எந்தவித உரிமையும் கோர முடியாது. மறு ஏலத்தில் பங்கேற்க அவர்களுக்கு தகுதி இல்லை.
- ஈடுபெற்ற சொத்து விற்பது தொடர்பாக ஏலதாரர்கள் / வெற்றி பெற்ற ஏலதாரர் டொசிட் செய்த தொகைக்கு EMD அல்லது எந்த வட்டியும் பொருந்தாது.
- (ஏ) பொருந்தக்கூடிய முத்திரை வரி/ பதிவு / மாற்று கட்டணங்கள் (பி) அனைத்து சட்டரீதியான, சட்டப்பூர்வமற்ற, மாற்றம், மின்சாரம், கழிவுநீர் கட்டணங்கள், ஏதாவது பாக்கி, வரி, கட்டணங்கள், வரிகள், மதிப்பீடு கட்டணங்கள், ஏதாவது நபர், சங்கம் அல்லது அதிகாரிக்கு பாக்கி இருந்தால் அவற்றை வெற்றி பெற்ற ஏலதாரர் மட்டுமே செலுத்த வேண்டும்.
- வெற்றிபெற்ற ஏலதாரருக்கு மட்டுமே பரிந்துரைக்கப்பட்ட வடிவில் விற்பனை சான்றிதழ் வழங்கப்படும்.
- நடைமுறையில் உள்ள முத்திரை மற்றும் பதிவுச் சட்டத்தின் விதிகளின் படி விற்பனைச் சான்றிதழுக்கான கட்டணங்கள் பதிவு போன்றவற்றை வெற்றி பெற்ற ஏலதாரர் ஏற்றுக் கொள்ள வேண்டும். பொருந்தக்கூடிய போக்குவரத்து, பதிவு கட்டணம், முத்திரை கட்டணம், வரிகள், கட்டணம் போன்றவற்றிற்கான கட்டணங்களை வெற்றி பெற்ற ஏலதாரர் ஏற்றுக்கொள்வார்.
- விற்பனை சொத்தில் ஏதேனும் வில்லங்கம் இருந்தால், வில்லங்கத்தை டிஸ்சார்ஜ் செய்ய வட்டி, செலவு மற்றும் கட்டணங்கள் உள்ளிட்ட தேவையான தொகையை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் வெற்றி பெற்ற ஏலதாரர் / வாங்குபவர் செலுத்த வேண்டும்.
- ஒருவேளை பொது ஏலம் நிறுத்தப்பட்டால், ஒத்தி வைக்கப்பட்டால், மறுபரிசீலனை செய்தால் அல்லது ரத்து செய்யப்பட்டால், பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட், **நெற்குன்றம் கிளையில்** உள்ள அறிவிப்பு பலகையில் பொது அறிவிப்பு வைக்கப்படும். இது குறித்து ஏலதாரர் மற்றும் இதர நபர்களுக்கு தனிப்பட்ட முறையில் எந்தவித அறிவிப்பும் அனுப்பப்பட மாட்டாது.
- ஏலதாரர்களால் ஏலத்தை சமர்ப்பிப்பது, அவர்கள் பொது ஏலத்தை நிர்வகிக்கும் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் படித்து, புரிந்து கொண்டு ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படுகிறது.
- ஏல நடைமுறைகள் முடிந்த பின்னர் வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு EMD தொகை திரும்ப வழங்கப்படும்.
- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு அதிகபட்ச விலைப்புள்ளி / விலைகோரலை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயமில்லை. மேலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, எந்தகாரணமும் கூறாமல், ஏதேனும் அல்லது அனைத்து விலைக்குறிப்பீட்டினையும் ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க அல்லது பொது ஏலத்தை ஒத்தி வைக்க / தள்ளி வைக்க / ரத்து செய்ய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு முழு உரிமை உண்டு.

**தேதி : 29.10.2024; இடம் : சென்னை** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடெட்**